செ.வெ. எண்: 118 நாள்: 08.02.2012

# பத்திரிக்கைச் செய்தி

## மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டம்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குரிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு 2011–2012ம் ஆண்டுக்கு ரூ. 1155.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மாணவ/மாணவியர் கல்வி உதவித்தொகை, வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனை வழங்குதல், இணைப்புச்சாலை அமைத்தல், மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்தல், கல்விமேம்பாடு மற்றும் விடுதி நிர்வாகம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படித் திட்டங்களை உரிய காலத்தில் முடித்து அதன் பயன்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை சென்றடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணைப்படி 08.02.2012 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என். சுப்ரமணியன் அவர்கள் தலைமையில் எழிலகம், வருவாய் நிர்வாகத்துறை கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது **அவ்வமயம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கலை இலக்கிய மேம்பாட்டு பணி அமைப்பு மூலம் தேர்வு செய்யப்பட்ட 10 எழுத்தாளர்களுக்கு நூல் வெளியிட வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000/– த்தில் முதல் தவணை தொகை ரூ.10,000/– க்கான காசோலையை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்.**

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தாட்கோ மேலாண்மை இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் இதர உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர். இவ்வாய்வுக்கூட்டத்தின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் நலப்பள்ளி / விடுதிகள் – கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு பற்றியும், ஆதிதிராவிடர்கள் சமுதாயக்கூடம் கட்டுவது பற்றியும், மாணவ / மாணவியர்களுக்குரிய கல்வி உதவித்தொகையை தாமதமின்றி மார்ச் மாதத்திற்குள் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட வேண்டும் எனவும், இப்பணியை தொய்வின்றி செயல்படுத்துமாறும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இலவச வீட்டுமனை வழங்குதல், இணைப்புச்சாலை மயானம் மற்றும் மயானப்பாதை மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதில் முனைப்புடன் செயல்பட்டு திட்டங்களை விரைவில் செயல்படுத்துமாறும் அறிவுறுத்தினார். அரசின் அனைத்து திட்டங்களையும் முனைப்புடன் செயல்படுத்தி நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நல்வாழ்வினை கருத்தில்கொண்டு தொலைநோக்கு பார்வையுடன் அயராது உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில் அனைத்து பணிகளையும் விரைந்து செயல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**